www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

**A**

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

## பொதுத்தமிழ்

நேரம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

I. பலவுள் தெரிக. 8 x 1 = 8

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல்
   அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம்
   இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்
2. பொருத்துக :
   அ) தமிழ் அழகியல் - 1) பரலி சு.நெல்லையப்பர்
   ஆ) நிலவுப்பூ - 2) தி.சு.நடராசன்
   இ) கிடை - 3) சிற்பி பாலசுப்பிரமணியம்
   ஈ) உய்யும் வழி - 4) கி.ராஜநாராயணன்
   அ) 4,3,2,1 ஆ) 1,4,2,3 இ) 2,4,1,3 ஈ) 2,3,4,1
3. நரம்புகளுக்குள் வீணை மீட்டிக் கொண்டிருக்கிறது என்று அய்யப்பமாதவன் குறிப்பிடுவது
   அ) சூரிய ஒளிக்கதிர் ஆ) மழை மேகங்கள்
   இ) மழைத்துளிகள் ஈ) நீர்நிலைகள்
4. தமிழில் திணைப்பாகுபாடு ________ அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளது.
   அ) பொருட்குறிப்பு ஆ) சொற்குறிப்பு இ) தொடர்க்குறிப்பு
5. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்க காலச் சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன அவை ________.
   அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்
   இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்
6. இவற்றை வாயிலுக்கே சென்று இன்முகத்துடன் வரவேற்பாயாக என்று ஜலாலுத்தீன் ரூமி குறிப்பிடுவது
   அ) வக்கிரம் ஆ) அவமானம் இ) வஞ்சனை ஈ) இவை அனைத்தும்
7. 'வளைஇ' - என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம் ஆ) சொல்லிசை அளபெடை
   இ) பண்புத்தொகை ஈ) ஈற்றுப் போலி
8. 'கிழக்கு வாசல் உதயம்' - யார் எழுதிய நூல்?
   அ) பூமணி ஆ) செல்வராஜ்
   இ) பரலி சு. நெல்லையப்பர் ஈ) தி.சு. நடராசன்

II. எவையேனும் நான்கனுக்கு விடையளி. 4 x 2 = 8

9. கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?
10. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
11. புக்கில், தன்மனை - சிறுகுறிப்பு எழுதுக.
12. எதிர்பாராத நிகழ்வுகளை ஜலாலுத்தீன் ரூமி எவ்வாறு உருவகப்படுத்துகிறார்?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

13. அணியிலக்கணத்தை மட்டுமே கூறும் இலக்கண நூல்கள் யாவை?

14. முன்னம் ஓர்நாள் பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தாய். யார் யாரைப் பற்றி கூறியது?

III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12

15. சங்கப்பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் - விளக்குக.

16. 'ஏங்கொலிநீர் ஞாலத்து இருளகற்றும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

17. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

18. மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.

19. பொருள் வேற்றுமை அணியைச் சான்று தந்து விளக்குக.

IV. எவையேனும் மூன்றனுக்கு விடை தருக. 3x2=6

20. உவமைத் தொடர்களைச் சொற்றொடர்களில் அமைத்து எழுதுக.

அ) கிணற்றுத் தவளை போல ஆ) அச்சாணி இல்லாத தேர் போல

21. தமிழ்ப்படுத்துக :

அ) Biography ஆ) Railway Signal

22. ஏதேனும் ஒன்றுக்கு பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) கலங்கி ஆ) வந்து

23. ஏதேனும் ஒன்றுக்கு புணர்ச்சி விதி தருக.

அ) வானமெல்லாம் ஆ) புதுப்பெயல்

24. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

V. பெருவினா (அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக) 2x5=10

25. தமிழின் சீரிளமைத் திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

*(அல்லது)*

நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

26. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப் பற்று ஆகியவற்றை விவரிக்க.

*(அல்லது)*

குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்து மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது - எவ்வாறு? விளக்குக.

VI. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.

27. அ) 'ஓங்கலிடை' எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடல்

ஆ) 'அரிது' என முடியும் குறள்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com